**சுருக்கம்**

சென்னை மாநகராட்சி – மாநகராட்சிப் பணிகள் – தொழில்நுட்ப அனுமதி பல்வேறு வகை மாநகராட்சிப் பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்குவதற்கான தொழில்நுட்ப அலுவலர்களின் நிதி ஆதார வரம்பு உயர்த்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசாணை (நிலை) எண்.81 நாள் : 21.05.2008
வைகாசி – 8,
திருவள்ளுவர்
ஆண்டு – 2039,

படிக்கவும் :-

1. அரசாணை (2டி) எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18.11.97
2. அரசு ஆணை (நிலை) எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 07.06.1999
3. சென்னை மாநகராட்சி ஆணையர் கடிதம் ப.து.ந.க.எண்.4152 (1)/2000, நாள் 11.01.2008

☯☯☯

**ஆணை:–**

பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடித்தில் உள்ள சென்னை மாநகராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று சென்னை மாநகராட்சி பொறியாளர்களுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கத் தேவையான அதிகார வரம்பினை கீழ்க்கண்டவாறு நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

| வரிசை எண். | மாநகராட்சி பொறியாளர் | தொழில்நுட்ப அனுமதி வழங்க அதிகார வரம்பு (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | தலைமை பொறியாளர் | முழு அதிகாரம் |
| 2. | கண்காணிப்பு பொறியாளர் | ரூ.1 கோடி வரை |
| 3. | செயற்பொறியாளர் | ரூ.30,00,000 லட்சம் வரை (முப்பது லட்சம் வரை) |
| 4. | உதவி செயற்பொறியாளர் | ரூ.2,00,000 லட்சம் வரை (இரண்டு லட்சம் வரை) |

இவ்வாணை நிதித்துறை அ.சா.கு.எண்.1522.நி.செ./ப்பி/2008, நாள் 19.05.2008 இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,

அரசுச் செயலாளர்.

பெறுநர் :
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை –3
நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை –5
இயக்குநர், உள்ளாட்சித் நிதி தணிக்கைகள், சென்னை – 108
மாநில கணக்காயர், சென்னை – 18/35
<u>நகல் :</u>
நிதித்துறை, சென்னை – 9.
பொதுப் பணித் துறை / நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் அந2 / மாந2, சென்னை – 9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை – 9.
இ.கோ./உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு
அலுவலர்.